*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 27/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திருமதி.சின்னபிள்ளை க/பெ. வீரமுத்து***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06.05.2025.**

துவக்க நேரம் 12.48 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.மோகன்சுந்தரராசு அவர்கள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆணையம்பட்டியில் குடியிருந்து, இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 18.09.2023 விநாயகர் சதுர்த்தி அன்று நானும், எனது சின்னபையன் வினோத்பிரகாஷ் ஆகிய இருவரும் எங்களது காட்டில் மக்காச்சோளம் போட்டுக்கொண்டிருந்தோம். அப்பொழுது கருப்பையா, பாப்பாத்தி, பிரபாகரன், பிரபுதேவா ஆகிய நான்குபேரும் வந்து முட்டுக்கல்லை ஏண்டி பிடுங்கிபோட்ட தேவடியா, நாதேரி, ஓயாலபோவ என்று என்னை கெட்ட வார்த்தையால் பேசினார்கள்.

2) அதற்கு நான் எந்தவொரு முட்டுகல்லையும் பிடுங்கல ஏன் இப்படி சொல்றிங்க என்று சொன்னதற்கு, பிரபாகரனும், கருப்பையாவும் கொடுவாளை எடுத்துவந்து எனது முன்நெற்றியில், கருப்பையா வெட்டினார். பிரபாகரன், எனது இடது நெற்றிக்கு மேல் பகுதியில் வெட்டினார். ஏன் இப்படி என் அம்மாவை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, எனது மகனையும் பிரபாகரனும், கருப்பையாவும் தேவடியா மவனே உன்னை உயிரோட விடமாட்டோம் என்று சொல்லி அவனையும் கொடுவாளால் தலையில் வெட்டினார்கள், அப்பொழுது அருகிலிருந்த பாப்பாத்தி, கருப்பையா ஆகியோர்கள் எங்களை உயிரோடு

விடக்கூடாது என்று சொன்னதன் பேரில், பிரபுதேவா குத்துக்கோலை எடுத்துவந்து எனது மகனின் இடதுபுற மார்பில் குத்திவிட்டார். உடனே எனது மகன் மயக்கமடைந்து விழுந்துவிட்டார். பாப்பாத்தி என்பவர் என்னையும், எனது மகனையும் உருட்டுக்கட்டையால் உடம்பில் முன்னும் பின்னும் அடித்தார்.

3) நாங்கள் சத்தம் போடவே அருகில் இருந்தவர்களான லட்சுமி, ராமர், ராஜேந்திரன், அய்மா ஆகியோர்கள் வந்து 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்து, அதில் நானும், எனது மகனும் கெங்கவல்லி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். கெங்கவல்லி அரசு மருத்துவமனையில் எனது மகன் கண்விழிக்கவில்லை.

4) கெங்கவல்லி அரசு மருத்துவமனைக்கு வந்த கெங்கவல்லி காவல் நிலைய போலிசார் அங்கு என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். பின் மேல் சிசிச்சைக்காக என்னையும், எனது மகனையும் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். ஆத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு எனது மகனை அனுப்பிவைத்தார்கள்.

5) சேலம் அரசு மருத்துவமனையிலிருந்து, ஓமலூர் மணிப்பால் மருத்துவமனைக்கு எனது மகனை அனுப்பிவைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். ஏற்கனவே எங்களுக்கிடையே சொத்து பிரச்சனை உள்ளது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.05 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.05.06 20:53:40 +0530

Judicial Magistrate No.2, Attur.